மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# 'விண்ணமுதம்' மரபுகவிதைத் தொகுப்புக் காட்டும் இறையியல்

# Theology In 'Vinnamutham' Classical Poetry Collection

யுவப்பிரியா இரா.செல்வன்/ Yuvapriyah R Selvan[1]
[1]M. Ed. Scholar, Faculty of Languages and Communication, Sultan Idris Education University
Corresponding Email: yuvapriyah99@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இந்த ஆய்வு, 'விண்ணமுதம்' தமிழ்க்கவிதைத் தொகுப்பில் வெளிப்படும் இறைச் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வின் நோக்கம், 'விண்ணமுதம்' தமிழ்க்கவிதைத் தொகுப்பு நூலில் கவிதைகள் இறைச் சிந்தனைச் சார்ந்து பல்வேறு தலைப்பினில் கையாளப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் கவிஞர் தனது கவிதையில் வெளிப்படுத்திய இக்கால இளையோர்களின் இறைச் சிந்தனைக் கருத்துகளைக் கண்டறிந்து ஆய்வு செய்வதேயாகும். இவ்வாய்வு, பண்புசார் அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வுக்கான தரவுகள் யாவும் நூலக ஆய்வு அணுகுமுறையில் கையாளப்பட்டுள்ளது. நூலக ஆய்விற்கு ஏற்புடைய நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி விளக்கவியல் அணுகுமுறையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் வழி 'விண்ணமுதம்' கவிதைத் தொகுப்பில் இறைச் சிந்தனை இருப்பதை அறிந்து கொள்ள முடிகிறது. இவ்வாய்வுக்குத் தேர்வு செய்யப்பட்ட 'விண்ணமுதம்' ஒரு மரபுகவிதைத் தொகுப்பு நூலாகும். இக்கவிதைத் தொகுப்பின் எழுத்தாளர் இளங்கவிஞர் சரண் சுக்லாம் ஆத்மலிங்கம் என்கிற விண்ணமுதன். 2021ஆம் ஆண்டு இந்நூல் வெளியீடு கண்டுள்ளது. விண்ணமுதம் கவிதைத் தொகுப்பு 106 பக்கங்களில் மொழி, குமுகாயம், இயற்கை, இறை, உறவுகள், காதல், வாழ்த்து, பல்சுவை ஆகிய எட்டு பிரிவை உள்ளடக்கிக் கவிதைகள் பல தலைப்புகளில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. மலேசிய நாட்டில் இளங்கலைப்பட்டப் படிப்பு மாணவன் வெளியிடும் முதல் மரபுகவிதை நூல் எனும் வரலாற்றுப் புகழ் பெற்றது இந்நூல்.

**கருச்சொற்கள்:** 'விண்ணமுதம்' கவிதைத் தொகுப்பு, இறையியல் சிந்தனை, இளையோர்

**Abstract**

This study was carried out based on the theological thought expressed in the collection of Tamil poetry 'Vinnamudam'. The purpose of this research is that the poems in the 'Vinnamudham' anthology of Tamil poetry have been dealt with on various topics depending on theological thought. Based on this, the poet expressed in his poetry the desire to find and analyse the religious ideas of the youth of this generation. This study was carried out using a qualitative approach. All the data for this review was handled using a bibliographic approach. This research has been carried out using a descriptive approach, which involves using books, research articles, and library research. Through this study, we can know that there is divine thought in the poetry collection 'Vinnamudam'. 'Vinnamudham' is a collection of traditional poetry selected for this review. The author of this collection of poems is Sharan Shuklam Atmalingam @ Vinnamudhan. The book was published in 2021. The 'Vinnamudam' poetry collection has 106 pages and includes eight sections, namely Language, Society, Nature, Religion, Relationships, Love, Greetings, and Palsavai. This book has the historic reputation of being the first book of classical poetry published by an undergraduate student in Malaysia.

**Keywords:** 'Vinnamudham' poetry collection, theological thought, youths

**முன்னுரை**

இக்கால உலகப் பெருமொழிகளிலும் இல்லாத அரிய மொழியணிகளும் இலக்கிய உத்திகளும் நிறைந்த அரிய செல்வம் பழந்தமிழ்க் கவிதையாகும் (மனோன்மணி தேவி, 2021). தமிழில் இரண்டாயிரம் ஆண்டுக் காலக் கவிதை மரபு இருந்து வருகிறது. இவை மரபுவழி எழுதப்பட்ட கவிதைகள் எனலாம். இதற்கான யாப்பிலக்கணம் தொல்காப்பியர் காலம் முதல் இருந்து வருகிறது (தமிழ் இணையக் கல்விக்கழகம்). மரபுகவிதைகள் எதுகை, மோனை, சீர், தளை, அடி, தொடை போன்ற கூறுகளைக் கொண்டு அமைய வேண்டும் என்ற விதிகளுக்குக் கட்டுப்படுகின்றன. கருத்து, உணர்ச்சி, கற்பனை, வடிவம் ஆகியவற்றால் பிற எல்லாவற்றினும் சிறந்து அமைவதும் மரபுகவிதைக்கே உரிய பண்பாகும் (விக்னேசு, 2017).

அவ்வகையில் இவ்வாய்விற்குக் கவிஞர் விண்ணமுதன் இயற்றிய 'விண்ணமுதம்' எனும் மரபுகவிதைத் தொகுப்பு நூல் உட்படுத்தப்பட்டுள்ளது. கவிஞரின் சுய வெளியீடாக 2021ஆம் ஆண்டில் இந்நூல் வெளியீடு கண்டுள்ளது. 'விண்ணமுதம்' கவிதைத் தொகுப்பில் 106 பக்கத்தில் மொழி, குமுகாயம், இயற்கை, உறவுகள், இறை, காதல், வாழ்த்து, பல்சுவை ஆகிய எட்டுப் பிரிவை உள்ளடக்கிக் கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூல் விண்ணமுதன் அவர்களின் முதல் கவிதைத் தொகுப்பாகும். இதற்கு முன்னர் பத்துப் போட்டிகளுக்கும் மேற்பட்டு நாடளாவிய, பன்னாட்டுப் போட்டிகளில் விண்ணமுதன் கலந்துள்ளார். அதில் சில போட்டிகளில் முதல் மூன்று நிலைகளில் வெற்றியும் கண்டுள்ளார். 2021ஆம் ஆண்டு 'கவிஞர் தாரா பாரதி' விருதும் அதே ஆண்டில் மொழியும் தொடர்பும் புலச் சிறப்பு விருதும் 2022ஆம் ஆண்டில் 'இளைய தலைமுறை இலக்கிய அரும்பு' இலக்கிய விருது, 'தமிழ்ச்சீலர்' விருது, 'கவிமலர்' விருது ஆகியவற்றைப் பெற்றுள்ளார். விண்ணமுதன் தமது கவிதைத் தொகுப்பில் 101 கவிதைகளைப் படையலாக்கியுள்ளார். அவை அனைத்தும் இளையோருக்கு தமிழ்க்கவிதையின்பால் ஆர்வத்தையும் விருப்பத்தையும் கூட்டும் வகையில் அமைந்துள்ளன (மனோன்மணி தேவி, 2021).

இறையியல் என்பது சமய நம்பிக்கை என்பதாகும். இறை நம்பிக்கை என்பது இறைவன் இருக்கின்றான் என்று நம்புவது மட்டும் அல்ல. இறைவன் தான் என் வாழ்க்கைக்கு முழு பொறுப்பேற்று இருக்கின்றான், அவனை நாடாமல் என் வாழ்வில் எதுவும் நடப்பதில்லை என்று நம் வாழ்க்கையை அவனுடன் தொடர்புப்படுத்தி வாழ்வது தான் இறை நம்பிக்கையாளரின் வாழ்வாகும். இறைவனின் ஏற்பாடுகளை நாம் பொருந்தி கொள்கின்ற பொழுதுதான் இறைவன் நம்மைக் கொண்டு பொருந்தி கொள்கின்றான். இவ்வுண்மையை அறிந்து செயல்பட்டவர்கள் இறை நேசர்களானார்கள் என்பது உண்மை வரலாறு.

**ஆய்வு அணுகுமுறை**

இவ்வாய்வுப் பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவைத் தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

**தரவுப் பகுப்பாய்வும் கலந்துரையாடலும்**

தேர்ந்தெடுக்கப்பட்ட இக்கவிதைத் தொகுப்பில் உள்ள எட்டுப் பாடுபொருளில் இறை என்ற பாடுபொருளில் அமைந்திருக்கும் கவிதைகள் மட்டுமே ஆராயப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில், இறையியல் நோக்கில் அமைந்த சில கவிதையை இத்தொகுப்பில் காணமுடிந்தது.

**இறைவன் மீது முழுமையான நம்பிக்கை**

நான்மாடக் கூடலிலே நங்கையவள் நிற்கின்றாள்
வான்முட்டும் கோவிலுள் மாமணியாய்! – வான்மழைபோல்
தூவிடுதே தாயைத் துதிக்கின்ற சேயினுள்ளம்;
தாவிடுதே தாயுளே அன்பு!
(விண்ணமுதம், அங்கயற் கண்ணி, பக். 46)

மேற்காணும் கவிதையில் கவிஞர் பெண் தெய்வத்தின் மகிமையைப் பற்றி விவரித்துள்ளார். இன்றும் மக்கள் தெய்வம் தன் நலனைக் காக்கும் என்று முழு நம்பிக்கையையும் விதைத்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்பதை இக்கவிதை உணர்த்துகிறது. நவீனமும் அறிவியலும் சூழ்ந்திருக்கும் இக்காலத்திலும் நம் சமூகத்தினர் குறிப்பாக இளைஞர்கள் இறைவன் மீது பெருமளவு நம்பிக்கையும் மரியாதையும் வைத்திருப்பது விண்ணமுதனின் இக்கவிதை வரிகள் விளக்குகின்றன. பெண் தெய்வமானவர் உலகமதைக் காத்தருள்பவளாகவும் மக்கள் நலன் காக்கும் மண்மகளாகவும் இக்கவிதையில் போற்றப்பட்டுள்ளார். மேலும், இளைஞர்கள் மத்தியில் பெண் தெய்வமானவர் ஒரு தாயின் அன்பை ஈடுசெய்து பக்தனைச் சேயாக அரவணைத்து நலன் காத்து புகழ்ச் சேர துணையிருப்பவளாய் வருணிக்கப்பட்டுள்ளார். பிரிவுக்குப் பின் ஒரு குழந்தைத் தன் தாயைக் காண எவ்வளவு ஆவலோடு காத்திருக்குமோ அதுபோல் மக்கள் தான் வணங்கும் தெய்வத்தைத் தன்னுள் அருளால் காண காத்திருக்கின்றனர் என்பதை இக்கவிதையில் கவிஞர் வெளிபடுத்தியுள்ளார்.

**இறைவன் இன்பத்தை மட்டுமே தருபவன்**

உனைத்தான் மெய்யினி உயிரெனத் தேடிட உதித்தாய்!
வினைத்தீர் ஆற்றலை விதையென நெஞ்சினில் விதைத்தாய்!
எனைத்தான் உன்னுளே இறைவனே இயல்புடன் இணைத்தாய்!
அனைத்தே உன்னருள்! அகிலமும் போற்றிட அணைத்தாய்!
(விண்ணமுதம், கோன், பக். 47)

மேற்காணும் கவிதையில் கவிஞர் இறைவன் தன்னை நம்பினோருக்கு முழுவதுமாக நன்மையை மட்டுமே செய்பவன் என்பதை உணர்த்தியுள்ளார். கவிஞர் இக்கவிதையை இறைவனை நோக்கி பாடுவது போலே இயற்றியுள்ளார். இறை நம்பிக்கைக் கொண்ட மனிதன் ஒருவர் தான் வாழ்ந்து அனுபவப்பட்டு பல காலங்களுக்குப் பிறகே அனைத்தும்

இறைவனே எனும் நிலைக்கு வருவதைப் பார்ப்பது இயல்பு. ஆனால் இருபத்து இரண்டு வயது மட்டுமே நிரம்பியிருந்த கவிஞர் இறைவனைத் தம் உயிரெனத் தேடுவதாகவும் தன் மனக் கோவினில் இறைவன் கோனாய்க் கோத்தான் என இயற்றியிருக்கிறார். மேலும், தாம் செய்யும் தீவினை யாவும் தீர்க்கப்பட்டு வாழ்வினில் இன்பமும் பெருக இறைவனே காரணமாக அமைகிறான் எனவும் கவிஞர் இயற்றியிருப்பது இக்கால இளைஞர்கள் மத்தியில் இறையியல் சிந்தனை மேலோங்கி இருப்பதை உணர முடிகிறது.

**சிவனருள் மனிதனைக் காத்திடும்**

நற்றிரு நாளிலே சிவனடியார்
நற்றிரு முறைகளைப் பெற்றவனே!
கற்றுணை பூட்டிடக் காத்தவனே!
சொற்றுணை தந்திடும் சோதியனே!
(விண்ணமுதம், சிவனருள், பக். 48)

மேற்காணும் கவிதையில் கவிஞர் சிவபெருமானின் அருளை விளக்கியுள்ளார். சிவபெருமான் மனிதனிடத்தில் மாயை நெருங்கிடாதும் தன் அருளால் மனிதனுக்கு நேரும் அத்தனை தீமைகளையும் அகற்றி, துன்பத்தைப் போக்கி காப்பவர் என கவிஞர் விளக்கியுள்ளார். மேலும், கவிதையின் இறுதி விருத்தத்தில் சிவனருள் தந்திடும் பாடலைத் துதித்து சிவனருள் பெற்று சிறந்திடுவோம் என்று கவிஞர் பாடியிருந்தார். இன்று உலகமே கையடக்கத் தொலைபேசிக்கு அடிமையாகியிருக்கின்றனர். குறிப்பாக இளைஞர்கள் அதில் மட்டுமே இன்பம் காண முடியும் எனும் சிந்தனைக்குள் மூழ்கிக் கிடக்கும் நிலையில் சிவபெருமானின் திருமுறைகளை நயத்துடன் பாடி சிவனருள் பெற்றிடுவோம் எனும் சிந்தனையைக் கவிஞர் தம் வாசகர்களுக்கு உணர்த்தியிருந்தது இன்றையக் காலத்தில் இளையோர் மத்தியில் இறையியல் மேலோங்கி நிற்கிறது என்பதை நிரூபிக்கிறது.

**இறைச் சிந்தனையோடு வாழ்வதால் உயர்வு**

ஆடும் கூத்தன் ஆடல் மன்னன்
ஆடும் காட்சி காணவே
பாடும் பாட்டில் பாட மென்னும்
பண்பை நாளும் கூட்டுவோம்!
தேடும் அந்தச் சீவன் காணத்
தேவன் வந்த பூமியும்
காடும் இங்குக் கைலை யாகும்
கார ணத்தைப் பாடுமே!
(விண்ணமுதம், தேடி வந்து காத்திடு, பக். 49)

மேற்காணும் கவிதையில் கவிஞர் மனிதர்கள் இறைச் சிந்தனையுடன் வாழ வேண்டும். அது தான் ஒருவரை வாழ்வின் உச்சத்திற்குக் கொண்டு செல்லும் என்பதை உணர்த்துகிறார். இக்கவிதையில் கவிஞர், இறைவனிடத்தில் தீமைகள் தம்மைத் தீண்டும் போது தாம் சொல்லாமலே தம்மைத் தேடி வந்து காத்திடு என்றும் சூதும் தன்னைச் சூழும் வேளை எப்படியாவது தமக்குத் தெரியப்படுத்து என்று கோரிக்கை வைப்பது கவிஞருக்கு இறைவன் மீதிருக்கும் முழுமையான நம்பிக்கையைக் காட்டுகிறது. இவ்வாறு இறைவனை நம்பியவனின் கன்மத்தை நீல கண்டன் நேரம் பார்த்து நீக்குவான் என்று கூறி கவிதையை நிறைவு செய்தது இறைச் சிந்தனையோடு செயல்படும் மனிதனுக்கு வாழ்வில் துன்பங்கள் நீங்கி படிபடியாக அவன் முன்னேறி செல்வான் என்பதை உணர்த்துகிறது. சான்றாக, ஏது துன்பம் ஏது சோகம் எனும் கவிஞரின் அடி இளைஞர்கள் மத்தியில் இறையியல் முழுவதும் பற்றியிருப்பதை அறிய முடிகிறது.

**இளையோரிடையே இறையியல் புரிதல்**

வண்டாடும் வண்ணமிகு
        மலர்ச்சோலை ஞிமிறாகக்
கொண்டாடும் மனத்தோடு
        குலமகளாம் கலைமகளை
எண்டிசையும் துதித்திடுவோம்!
        எழில்மகளாய்ப் பாடிடுவோம்!
வெண்டாம ரையாளே!
        வெண்ணிலவே போற்றுகிறோம்!
                (விண்ணமுதம், வெண்டாமரை வெண்ணிலவு!, பக். 50)

இக்கவிதையில் கவிஞர், தெய்வத்தை வருணித்துப் பாடியுள்ளார். இறைவன் யார்? இறைவனுடன் நான் யார்? எனும் இறையியல் புரிதலைக் கவிஞர் இக்கவிதையில் விளக்கியுள்ளார். பொதுவாக, இப்புரிதல் வயதில் சற்று முதிர்ந்தவர்கள் விளக்கக் கேட்டிருப்போம். ஆனால், கவிஞர் தம் இளம் வயதிலே இறைவன்பால் ஆழ்ந்த புரிதலைக் கொண்டு கவிதைகள் இயற்றியிருப்பது தொடக்கத்திலே இளையோர் மத்தியில் இறையியலைக் காண முடிகிறதே எனும் சிந்தனையை நம்முள் விதைக்கிறது. அவ்வகையில், கவிஞர் தெய்வத்தை எழில்மகளாய், வெண்ணிலவாய், கலைமகளாய், கலைத்தாயாய், மரகதமாய் உவமைப்படுத்தியிருக்கிறார். இவை, தெய்வத்தின் பால் கவிஞருக்கு இருக்கும் காதலை வெளிப்படுத்துகிறது. இவ்வாறு வருணித்ததிலிருந்து, தெய்வம் யார், அவரின் மகிமை என்ன என்பதை கவிஞர் அறிந்திருப்பதையும் தெய்வத்தைப் போற்றுவதால் கவிஞருக்கும் இன்பம் பெருவதே நன்மை என்பதை அவர் உணர்ந்திருப்பதையும் நம்மால் அறிய முடிகிறது.

## இறை வழி நற்பண்பு

உள்ளொளி ஏற்றும் உயர்வான நல்லன்பை ஒம்புகின்ற
வள்ளலே! நின்னொளி வார்த்தே எனையினி வாட்டுகின்ற
கள்ளனாம் மாயையைக் காணா உலகினைக் காட்டிடுவாய்!
வள்ளலே வாருமென் வாழ்வில் ஒளியை வழங்கிடவே!

(விண்ணமுதம், வள்ளல் பெருமான், பக். 51)

இக்கவிதையின் வழி, கவிஞர் இறைச் சிந்தனையை நன்கு உள்வாங்கியுள்ளதைக் காண முடிகிறது. வள்ளல் பெருமானை வணங்கியதோடு மட்டுமின்றி அவர் காட்டிய நல்வழிகளை உணர்ந்து உள்வாங்கியதால் மட்டுமே கவிஞரால் இக்கவிதையைத் துல்லியமாக இயற்றியிருக்க முடியும். சான்றாக, வாடும் பயிறை வழியிலே கண்டதாலே வாடிநின்றார் எனும் கவிஞரின் கவிதை அடி வள்ளல் பெருமான் இறை வழி காட்டிய நற்பண்பைக் குறிக்கிறது. அந்நற்பண்பு கவிஞரின் மனதில் பதிந்திருப்பதாலே கவிதையில் வெளிப்படுகிறது. ஆக, வள்ளல் காட்டிய இறை சிந்ததனையில் நல்ல பண்புகளையும் இக்கால இளைஞர்கள் கற்றுக் கொள்ள தவறவில்லை என்பதைக் கவிஞர் இக்கவிதையின் வழி உணர்த்துகிறார். ஆக, இக்கால இளைஞர்களிடையே மேலோங்கியிருக்கும் இறைசிந்தனையே தம் அன்றாட வாழ்வில் அவர்கள் இவ்வாறு அமல்படுத்தத் தூண்டுகிறது.

## நிறைவுரை

கவிஞர் விண்ணமுதனின் இறையியல் சிந்தனைகள் பல நிலைகளில் விரிந்து படர்ந்துள்ள நிலையை அவரது 'விண்ணமுதம்' கவிதைத் தொகுப்புக் காட்டுகிறது. 'விண்ணமுதம்' கவிதைத் தொகுப்பில் காணப்படும் பல கவிதைகளில் இறையியல் சிந்தனை நிறைந்து காணப்படுகின்றது. சான்றாக, அங்கயற் கண்ணி, இறையருளாளன், கோன், சிவனருள், தேடி வந்து காத்திடு, வெண்டாமரை வெண்ணிலவு, பூசமதில் பிறந்தவனே, வள்ளல் பெருமான் ஆகிய எட்டு இறையியல் சிந்தனை நிறைந்த கவிதைகளில் அங்கயற் கண்ணி, கோன், சிவனருள், தேடி வந்து காத்திடு, வெண்டாமரை வெண்ணிலவுவள்ளல் பெருமான் ஆகிய ஆறு கவிதைகளை ஆய்வு செய்ததில் இறைவன் மீது முழுமையான நம்பிக்கை, இறைவன் இன்பத்தை மட்டும் தருபவன், சிவனருள் மனிதனைக் காக்கும், இறை சிந்தனையோடு வாழ்ந்தால் உயர்வு, இளையோரிடையே இறையியல் புரிதல், இறை வழி நற்பண்பு ஆகிய ஆறு இறையியல் சிந்தனைக் கருத்துகள் 'இறை' என்ற பாடுபொருள் பிரிவில் வெளிப்பட்டுள்ளன. அவ்வகையில், 'விண்ணமுதம்' கவிதைத் தொகுப்பு இறையியல் நோக்கில் அமைந்துள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

## துணைநூற்பட்டியல்


Webster, J. (2015). What Makes Theology Theological? Journal of Analytic Theology, 3, 17-28.

ஓர் ஆய்வு (Doctoral dissertation, Jabatan Pengajian India, Fakulti Sastera dan Sains Sosial, Universiti Malaya, 2010/11.).

நவீன் கணேசன். (2022). விண்ணமுதம் தமிழ்க்கவிதைத் தொகுப்பில் பன்முகச் சிந்தனை: Research Gate.

நிரஞ்சனி தசரதன். (2011). கவியரசு கண்ணதாசன் கவிதைகளில் இறையியல் சிந்தனை:

விண்ணமுதன். (2021). விண்ணமுதம் (கவிதைத் தொகுப்பு). பேரா: சரண் சுக்லாம் ஆத்மலிங்கம்.